31st December 1953]

Payment of cycle allowance to municipal bill-collectors.

3 Q.—SRI T. PURUSHOTHAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether municipal bill-collectors are paid cycle allowance as in the case of other outdoor subordinates in the municipalities; and if not why not?

A.—The municipal bill-collectors are not paid cycle allowance. Judging from the nature of the work of bill-collectors who have to go from door to door for collection and the limited area assigned to each bill collector, the maintenance of a cycle by them and an allowance therefor are unnecessary.

Government transport buses in the City.

4 Q.—SRI V. GURUNANDAN ROW : Will the Hon. the Minister for Industries, Labour and Co-operation be pleased to lay on the table of the House a statement showing—

(i) the daily average number of Government Transport buses on the road in the City of Madras from March to October 1953 (both months inclusive);

(ii) the average daily collections from sale of bus tickets for the above period; and

(iii) the daily average number of tickets sold for the above period?

A.—(i) *to* (iii) The information required is furnished below :—

Month.	*Daily average number of buses on road.*			*Daily average collection from sale of tickets.*	*Daily average number of tickets sold.*
	Buses.	*Lorry buses.*	*Total.*		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1953				RS.	
March ..	269	..	269	30,708	238,517
April ..	276	13	289	34,772	286,044
May ..	281	13	294	36,632	307,629
June ..	271	13	284	37,274	313,968
July ..	273	13	286	36,949	313,951
August ..	273	14	287	35,804	301,509
September ..	271	14	285	35,112	297,559
October ..	267	12	279	32,950	280,461

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—BUSINESS OF THE HOUSE.

* DR. A. LAKSHMANASWAMI MUDALIYAR :—" May I know from the Hon. Leader of the House what the programme for this House is and how long it will be sitting? I see that certain non-official resolutions and Bills have been ballotted for. I should like to know whether a non-official day will be allotted for the consideration of these resolutions and Bills."

* THE HON. SRI C. RAJAGOPALACHARI :—" We were thinking whether it would be more convenient for the Members to

[Sri C. Rajagopalachari] [31st December 1953

adjourn after the budget to meet on the 9th or 10th January. But I find that there is the difficulty of finding time if we adjourn like that. But on the whole, I am feeling—I am still open to a little discussion in the matter before coming to a final conclusion—that we should continue to sit along with the Legislative Assembly without any break so that there will be time available for the purpose mentioned by the Leader of the Opposition.''

III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE SECOND SIX MONTHS OF THE YEAR 1953-54 (LAST DAY).

Mr. CHAIRMAN :—" The hon. Member, Sri M. **Ethirajulu**, will continue his speech. He has got five more minutes.''

Sri M. ETHIRAJULU :—" கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது சர்க்காரால் உபகாரச் சம்பளம் பிற்பட்ட இனத்தவர்களுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது. அந்த உபகாரச் சம்பளம் வெள்ளையர் காலத்தில் எப்படி நடைபெற்று வந்ததோ, அம்மாதிரியே இன்னும் நடைபெற்று வருகிறது. அது யாருக்குப் போய்ச் சேருகிறது என்றால், போதுமான வருவாய் உள்ளவர்களுக்கும், அதிகப் பணம் படைத்தவர்களுக்கும் தான் போய்ச் சேருகிறது. அது எப்படியென்றால், ஒவ்வொரு ஊரிலும் இருக்கும் மணியக்காரர், சொத்து இருப்பவர்களுக்கு சொத்து இல்லையென்றும், வருவாய் உள்ளவர்களுக்கு வருவாய் இல்லையென்றும், கொடுக்கும்படியான சர்டிபிகேட்டின் பேரில், தாசில்தார் அவர்கள் இது சரிதான் என்று எழுதி உடனே மாகாண ஹரிஜன் வெல்பேர் டைரக்டருக்கு அனுப்பிவிடுகிறார்கள். அதன் பேரில், ஹரிஜன் வெல்பேர் டைரக்டர் அவர்கள் யாருக்கு கொடுப்பது, யாருக்கு கொடுக்கக்கூடாதென்று அவரால் கண்டுபிடிக்க முடியாமல் சம்பள சலுகை கொடுத்துவிடுகிறார். உண்மையாகவே பிற்பட்ட இனத்தவர்களுக்கு சலுகை கிடைப்பதில்லை. இந்தச் சலுகைகளெல்லாம் பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் 143 வகுப்பினருள் இருக்கும் எல்லா வசதியுடையவர்களுடைய குழந்தைகளுக்குப் போய்ச் சேருகிறதே தவிர, மிகவும் பிற்பட்ட இனத்தவராக இருக்கும்படியான குழந்தைகளுக்குப் போய்ச் சேருவதில்லை. ஹரிஜன இலாகா அதிகாரியானவர் உண்மையாகவே பிற்பட்ட இனத்தவர்களுக்கு இந்தச் சலுகைகள் போய்ச்சேருவதற்கான ஏற்பாட்டைச்செய்ய முயற்சி எடுக்கவேண்டும். உண்மையாகவே பிற்பட்ட இனத்தவர்களுக்குப் போய்ச் சேருகிறதா, அல்லது அதற்குமாறாக மணியக்காரர் சர்டிபிகேட்டின் பேரில், தாசில்தார் கையெழுத்திட்டு, கொடுக்கப்படுவது சரிதானா, என்று சோதனைசெய்து, அவர்களுக்குத் தக்க தண்டனையை அளிக்க சர்க்கார் முயற்சிக்கவேண்டும். உண்மையாகவே சில பிற்பட்ட நிலைமையில் இருக்கிற குழந்தைகளுக்கு இந்தச் சலுகைகள் போய்ச் சேர்வதில்லையென்று நான் இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதை முக்கியமாக அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

" தென்னாற்காடு ஜில்லா சுமார் 11 தாலூகாக்களைக்கொண்ட ஒரு ஜில்லா. அத்தனை தாலூகாக்கள் இருக்கக்கூடிய ஒரு ஜில்லாவிற்கு, அதன் தலைநகரமாகிய கடலூரில் சர்க்கார் ஹெட் குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரி இருக்கிறது. குறிப்பாக, கடலூர் தாலூகாவைப் பொறுத்தவரை, சுற்றிலும் 200 கிராமங்களுக்கு மேல் இருக்கின்றன, இவ்வளவு கிராமங்களிலுள்ள ஜனங்களுக்கும் இந்த ஒரு ஆஸ்பத்திரிதான் இருக்கிறது. அதில் 160 படுக்கைகள்தான் இருக்கின்றன. இதிலும் சர்க்கார் ஊழியர்களுக்கும் அதே ஆஸ்பத்திரியில் சலுகை காட்டப்பட்டு வருகிறது. பொதுமக்கள் இப்பொழுது ரொம்பவும் நல்ல வைத்திய வசதியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு ஆஸ்பத்திரியில் போதுமான படுக்கை வசதி கிடைக்கவில்லை. அதை விஸ்தரிக்கவேண்டுமென்று பொதுமக்கள் நெடுநாட்களாக சொல்லிக்கொண்டு வருகிறார்கள். சட்டசபை அங்கததினர்களும் சொல்லிக் கொண்டுவருகிறார்கள். இதைச் சென்ற மாதத்தில் கூட சுகாதார